830

ஸ்ரீ யேசாய நம:

அர்ச்: அன்னம்மாள் மதுவிலக்குச் சபை.

# மதுவிலக்குக் கும்மி.

St. Anne's Temperance Society



Bangalore.

ஸ்ரீமந் C. S. ஞானப்பிரகாஸம்பிள்ளை

அவர்களியற்றியது

...ாகவியாசன் பிரஸ் சென்னை.

0785MGP,M
N46
129628



திரித்வமேவகாய நம:

# மதுவிலக்குக் கும்மி.

இது

பெங்களூர் பிளியக்கியள்ளி

அர்ச்: அன்னம்மாள் மதுவிலக்குக்கிளைச்சபையின்

காரியாதிபரும்,

பொது பொக்கிஷாதிபரும்,

செயின்ற் மேரீஸ் ஸ்கூல் தலைமை உபாத்தியாயருமாகிய

**ஸ்ரீமாந் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்களா**

லியற்றி

சென்னைப் பூலோகவியாசன்

அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பெற்று

அர்ச்: அன்னம்மாள் மதுவிலக்குச்சபை

வருடோத்ஸவத்தன்று

பிரசுரிக்கப்பெற்றது.

1916.

தனிகாப்பி — விலை அணா 2

C

# நான்முகம்.

அன்பிற்கனிந்த அறிஞர்காள்!

பஞ்சமாபாதகத்து ளொன்றாகுங்கொடிய குடிப்பழக்கத்திலாழ்ந்து நம்மனோரில் பெரும்பான்மையோர் ஆத்தும சரீர நஷ்டத்துக்காளாய், இகபரநன்மைகளை யிழந்து, வறுமை—குடும்பப்பிரிவு—தற்கொலை—பைத்தியம்—ரோகம்—அற்பஆயுள் முதலிய பெருந் தின்மைகளுக்குள்ளானார்கள், ஆகிறார்கள் என்று நாடோறும் நாம் பிரத்தியக்ஷாநுபவத்தோடு கண்டும்கேட்டும் வருமத்தியந்தப் பரிதாபக்காட்சியென்றனைவரும் ஒப்புக்கொள்ளும் பஹிரங்க ரஹஸ்யமன்றோ? இத்தீயப்பழக்க வழக்கத்தைக்குறைக்க, கல்வி கேள்விகளிற்சிறந்த மேதாவிகளிற் பலர் குடிவெறியாலுண்டாகும் அளவறுக்கப்படாக் கஷ்ட நஷ்டங்களை வியாஸங்களாகவும், செய்யுட்களாகவும், பத்திரிகைவாயிலாகவும், வெள்ளிடைமலைபோல் விரித்துப் பிரசுரித்து வெளியிட்டிருப்பதோடு ஆங்காங்கு மதுவிலக்குச்சபைகளும் ஸ்தாபித்து வேண்டிய முயற்சியுமெடுத்து வருகின்றனர், வந்துமென்ன? ஆலைப்பலாவாக்கலாமோ............மூர்க்கரைச் சீராக்கலாமோ? என்னு முதுரைக்கிலக்காக குடியர்களின் றொகை அதிகப்பட்டுக்கொண்டு வருகிறதே யல்லாமல் குறைவதைக்காணோம். எனினும் "சகோதர நஷ்டம் சருவ நஷ்டம்" என்றறிந்த அறிஞர்களிற்சிலர் இங்கு சங்: J. B. சர்வாந்தோன் குருஸ்வாமிகளக்ராஸனத்தின்கீழ் அர்ச்: அன்னம்மாள் மதுவிலக்குச்சபை யொன்று ஸ்தாபித்து இதின்கிளைச்சபைகள் பல இடங்களிலும் பஜனை சபைகளிலுமேற்படுத்தியவைகளினபிவிருத்தியை நாடியல்லும் பகலு முழைத்து

வருகின்றனர். ஆகவே, இச்சபையினங்கங்களும், அவர்கள் குடும்பங்களும் மதுபான பழக்கத்தின் தீமைகளையும் மதுவிலக்கின் நன்மைகளையும், தங்களுக்கொழிவான நேரங்களில் வாசித்துணர்ந்து தங்களயலாருக்கு மன்பர்களுக்கும் அறிவிக்குமாறுஎளியதமிழில் கும்மிநடையில் பாடவேண்டுமென்று விரும்பியதன்படிக்குக் கல்விகேள்விகளிற் சுத்தசூன்யமாகுமடிமைமேற்கூறியமேதாவிகள் வெளியிட்டதை ஆதாரமாகக்கொண்டு எதிரொலிக்கொப்ப இம் "மதுவிலக்குக்கும்மி" பாடினேன். இது பொதுஜன சமூஹநன்மையைக்கருதிய நூலாதலால், தீயக்குடிப் பழக்கமுள்ளோர் குறைகூறி கோபங்கொள்வாரெனினும்—அஃதை யற்பமும் பொருட்படுத்தாது அவர்கள். நன்மை கடைப்பிடித்து நல்லொழுக்கத்தை நாடவேண்டுமென்பதே முழுநோக்கமாம். அறிஞர்கள் குற்றங்களைந்து குணத்தை ஹ்ரஹித்து அடியனை க்ஷமித்தங்கீகரிப்பார்களென்பது பூரண நம்பிக்கை.

இங்ஙனம்

அடிமை

C. S. ஞானப்பிரகாஸம் பிள்ளை.

பிளாக்கிபள்ளி
பெங்களூர்
1916.

---

இது நூல் மேற்படி அர்ச்: அன்னம்மாள் மதுவிலக்குசபை: கரக்பூர் அர்ச்: அந்தோணியார் திருவடி பக்தபஜனைசபை ஸ்ரீமான், சி. அ. அப்பாதுரைபிள்ளை இவர்கள் பொருட்சகாயத்தால் பிரசுரிக்கப்பெற்றது.

# சாற்றுக் கவிகள்.

---

சென்னையில் பிரசுரமாகும் கத்தோலிக்கு

செந்தமிழ்ப் பத்திரிகையாகும் "நல்லாயன்" அதிபராகிய

சங்: இராஜரிஷி

## A. R. ஜான் குருஸ்வாமியவர்க

ளியம்பியது.

பெங்களூர் செண்ட் மேரிஸ் ஸ்கூல் தலைமை உபாத்தியாயராகிய ம-ா-ா-ஸ்ரீ சி. எஸ். ஞானப்பிரகாஸம் பிள்ளை அவர்களாலியற்றப்பட்ட "மதுவிலக்குக்கும்மி" என்னும் சிறு புத்தகத்தை நாம் பார்வையிட்டோம். அது சொற்சுவை, பொருட்சுவை பொருந்த பாடப்பட்டிருப்பதோடு மதுபானத்தால் மானிடருக்கு வருங்கேடுபாடுகளை விவரித்துங் காட்டுவதால், குடிக்கேடருக்கும், குடிப் பழகுபவர்களுக்குப், குடியாதவர்களுக்குங் கூட ஓர் அருமருந்தெனச் சொல்லலாம். பசாசு மானிடஜாதியைக் கெடுக்க முக்கியமான ஆயுதமாகக் கொண்டிருக்கும் மதுபானம் பெருகிக் கேடுசெய்யும் இக்காலத்தில் இது ஒவ்வொருவரும் வாசித்துப் பயன் பெறக்கூடிய சற்புத்தகம், இதைச் சிரமமெடுத்து எழுதிய ஷை உபாத்தியார் அவர்களுக்குத் தமிழுலகம் கடப்பாடுடையது

---

F

கோலார் கனகவயல் அர்ச்: அன்னம்மாள்

மதுவிலக்குச்சங்கத்தின சீப், புரோமோட்டரும்

கோலார் விகட வித்வ கவி சிங்கமும்,

வரப்பிரசாத சித்திரகவி நாவலருமாகிய

## ஸ்ரீமான் சா. செ. துரைசாமி பிள்ளையவர்கள்

இயற்றியருளிய

## பஞ்சரத்ன வெண்பாமாலை.

பொல்லாக் குடியதனைப் போக்குதற்கோ ரேற்றநூ
வில்லாக் குறையதனை லேங்கியநம்—மெல்லார்க்கும்
பாடிதந்தான் கும்மியெனும் பாமாலை யாமிதனைச்
சூடிகொள்வார்க் குண்டாஞ் சுகம்.

நாற்ற மதுஜலத்தை நாளுங் குடித்துவெறித்
தாற்றுமத் தைகெடுத் தாஸ்திபொருள்—தோற்றழியு
மாந்தர்கட்கென் றேகும்மி மாமாலைப் பாடிதந்தான்
வேந்தன்ஞா னப்ரகாச வேள்.

சீரார் சகாதேவ செம்மலின்சற் புத்ரரத்னம்
பேராரும் ஞானப் பிரகாஸன்—நேராரும்
வித்வஜன சேகரன் ஏ. வீ. ஜோசேப் பிள்ளையினற்
றத்வமா ணாக்கனிவன் றான்.

ஆசு மதுரமுடன் சித்ரவித் தாரகவி
பேசும் புலவர்புகழ் பேராளன்—வாசமிகு
முத்தமிழ்க டற்குளித்தோன் முந்நூற் றுறைகடந்தோன்
சத்வன்ஞா னப்பிரகா சன்.

வானப் பிரகாச வள்ளலரு ளால் சி. எஸ்.
ஞானப் பிரகாச நாவலோய்நின்—றேனமிர்தப்
பாவாழி கும்மிதமிழ்ப் பாமாலை வாழியுன்றன்
நாவாழி நாளும் நனி.

கோலார் பொன்வயல் சாம்பின்ரீப்ஸ் தட்டோட்டு லேயன், அர்ச்: அமலோற்பவ லூர்துநாயகியின் திருபஜனை, உரிகம் பெரிய லேயன் அர்ச்: ஜெபமாலை மாதாவின் திருபஜனை, சாம்பின் ரீப்ஸ் B. பிளாக்லேயன், அர்ச்: சூசைமா முனிவரின் திருபஜனை, டீஸ்கம்பிளாக் E. சூசையப்பர்பாளையம் சிந். அப்: அர்ச்: சவேரியாரின் திருபஜனை, வாணியம்பாடி யொதியமாநகர் கோடியற்புத அர்ச்: அந்தோனியாரின் திருபஜனை, வேலூர் [Old Town] ஓல்ட்டவுண் அர்ச்: உத்தரீயமாதாவின் திருபஜனை, எல்த்தகிரி அர்ச்: அடைக்கலமாதாவின் திருபஜனைகளின் சபாநாயகரும், கோலார் சாம்பின்ரீப்ஸில் ஸ்தாபிதமாயிலகும், அர்ச்: அன்னம்மாளின், மதுவிலக்கு மகாசங்கத்தினுடையவும், ஷை பஜனைகளுக்குச் சேர்ந்த மேற்படி மதுவிலக்கு மகாசங்கத்தின் கிளைச்சங்கங்களினுடையவும் கவுண்சிலருமாகிய,

தமிழ் வித்துவான் வெண்பாபுலி

## A. பால்குரோஸ் அமலோற்பவிதாசன்

என்பவராற் பாடப்பட்ட

## பஞ்சரத்னப்பா.

அறுசீரடி – விருத்தம்.

திரியுலகை யொருநொடியி லமைத்தபரா பரனனையின்
திருமா தாவின்
பெரியமகா மதுவிலக்குச் சபைக்கும்மிப் பாடலொடு
பிறங்கும் ஞான
உரியநொண்டிச் சிந்தென்னும் பாடலிவைப் பாடினு
னுலகோ ருய்ய
அரியஞா னப்பிரகா சம்பிள்ளை யின்பெருமை
யறைதற் பாற்றோ?

ஞானப்ர காசமவர் பாடலிவைக் கேட்டுமனம்
நடுந டுங்கி

யீனப்ர தேசமதி லுள்ளகுடி வெறியர்பிர
மிறங்கி நாண
வானுலக சம்மனசோ ரர்ச்சியர்கள் நிதங்களித்து
மாட்சி யோங்கி
ஞானமுறும் பேரின்பா சீரளித்து மலர்மாரி
கல்கி னாரே.

கலைமகளை ரௌவைகம்பன் காளமே கன்முதலாங்
கலைவல் லார்கள்
மலையெனுந்தோ ளரசர்முகற் பற்பலர்மேற் கவிபாடி
மகிமை பெற்றார்
பலகவிகள் மரியனைமேற் பாடிநிதம் புகழ்பெற்றுப்
பாரின் மிக்க
நிலைமையடைந் தான்ஞானப் பிரகாசம் பிள்ளையெனு
நீதி மானே.

இயலிசைநா டகமென்னு முத்தமிழோ டாசுமுத
வியக்கப் பெற்ற
நியமதாஞ் சித்திரவித் தாரமெனு நாற்கவிக
ணிமிடத் திற்சொல்
தயைநிறைசாந் தம்பொறுமை யாளன்ஞா னப்பிரகா
சம்நற் பேரான்
ஜெயம்பெறவே மதுவிலக்குக் கும்மிகவி பாடிவைத்தான்
ஜெகத்தோர் கட்கே.

இன்னவன்பாக் கேட்டாயி ரம்நாவான் வெட்கிமண்ணுள்
ளிழிந்தா னென்றும்
முன்னவனுங் கும்பமுனி சிரமசைத்தான் கலைவல்லோர்
முன்னே நின்று
தன்னிகரில் லாப்பரம னைத்துதித்தா சீரளிக்கத்
தரணி மீது
சொன்னயஞா னப்பிரகா சம்பிள்ளை யென்றென்றுஞ்
சுகமாய் வாழ்க.

ஸ்ரீ யேசாய நம.

# மதுவிலக்குக் கும்மி.

## தெய்வஸ்துதி.

தானா யனாதியாய்ச் சரீரமில்லாது
சருவஞான வருண்மயமாய்
வானாதி காரண கர்த்தனாந் திரித்வ
வல்ல பரன்கழற் போற்றுவனே 1

ஆதிக்கு ளாதியா யங்குமிங் கெங்குமா
யநர்ந்த நன்மை நிறைகட லாய்ச்
சோதியா யிலகுஞ்சுத்த மஹத்துவ
தூயபிதா வடிபோற்று வனே 2

எல்லா வல்லதிரு பரம்பொருளாகி
யிகம்பர மென்றுஞ் சேவைபுரி
வல்லான ரவுரு வெய்ந்திக முதித்த
மரிசுதன் கழற் போற்றுவனே 3

பிதாச்சுதனிடம் பேதமில் லாமலே
பேசரு மெழுவரங் கணிறை
சதாநந்த மூன்று மாளாகு மிஸ்ப்ரீத்து
சாந்து ஸர்வேஸ்னைப் போற்றுவனே 3

## அமலோற்பவ மரியன்னையை யிரந்தல்.

அத்தன் றிருவுளத்தாதி காலமுதல்
அமைந்த மாருக்குக் குறித்த
நித்திய கன்னிகையா மமலோற்பவ
நேயமரியாய் துணை செய்யவே 5

## மலர்க்கர மாதவ சூசைமுனியை யிரந்தல்.

மாதவத் துயர்ந்து வரங்கள் கனிந்துகோன்
மலரற்புத மாகத் துளிர்த்து
வேதவடி வாயிலங்கும் பரன்றுதை
விமலச் சூசை துணை செய்யவே 6

## அர்ச்: ஞானப்ரகாஸியாரை இரந்தல்.

சீர்கொண்ட தேவதா பக்தியின் மிகுத்துச்
செப்பருந் தாழ்ச்சி விருத்லம்பூண்ட
பேர்கொண்ட ஞானப்ரகாஸியா ரெனக்கு
ப்ரியமா யென்றுந் துணைசெய்யவே 7

மதுவிலக்குச்சபை பரிபாலப்பாது காவலாகிய

## அர்ச்: அன்னம்மாளை இரந்தல்.

வாசிதி தாரகை யென்னும் புகழ்பெறும்
மாமரியன்னை நித்ய கன்னியைப்
பாரிற் பயந்தருள் பார்த்திப கோத்திர
பாக்ய வன்னம்மாள் துணைசெய்யவே 8

## தவகணத்தோரையிரந்தல்.

அணிசிம் மாசனஞ் சூழ்ந்தொழிவில்லாது
அர்ச்சனை புரியு மொன்பாஞ்சூரர்.

கணமுமெஞ் ஞான்றுமெனக்குப்பாது
காவலாய் வந்து துணைசெய்யவே 9

## சகல அர்ச்சயசிஷ்டர்களை இரந்தல்.

பரமனளித்த சத்திய மறையைப்
பாரெங்கு விளங்க போதனைசெய்
தருளிப் பன்னவம் புரியுஞ் சகல
அர்ச்சய சிஷ்டர் துணைசெய்யவே 10

## சகல வேதசாட்சிகளை யிரந்தல்.

ஞானத் திருமறையாமெய்ச் சோதியிந்த
ஞாலமெல் லாஞ்சுடர் விட்டெரிய
வேணு மென்றுயிரைக் கொடுத்த சகல
வேத சாட்சிகள் துணைசெய்யவே 11

---

# நூல்.

### காப்பு.

மாநில மாக்களை வருத்தியே பாச
வலைக்குள் ளாக்கி யிடர்படுத்தும்
ஈனமது விலக்குக் கும்மி யான்பாட
யேசு திருப்பதங் காப்பாமே, 12

## மது, நஞ்சென்னும் பாஷாணம் எனல்.

புத்தியை மயக்கி மூர்ச்சையடக்கியே
போதைத் தருமது பானமிது
டஸ்து சாரந்தீய பாஷாண மென்றுன்றோர்
வகுத்துக் கூறினர் அன்பர்களே 13

வெறிதரும்பானம் a இன்ட்டாக்ஸிகேன் என்று
விளக்கிக் கூறினா ராங்கிலேயர்
முறையாயிப்'பதச்சிதைவு நோக்கிடில்
முழுது நஞ்செனப் பொருள் கொள்ளுமே 14

"துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்டார் கள்ளுண்பவ"ரென்று
அஞ்சிட நாயனார் குறளை கூர்ந்து
ஆராய்ந்து பார்ப்பீரென் அன்பர்களே 15

அருந்தியவுடன் லாகிரி கொடுப்ப
தனைத்தும் விஷ நிறைந்ததெனப்
பரீக்ஷித் தறிந்த வைத்தியர்கள் பலர்
பஹிரங்க மாகக் கூறினாரே 16

சுத்தபானம் மதுபானமிரண்டையும்
தினமருந்து மநுபோகஸ்தர்
சத்யமாய்ச் சீர்தூக்கிப் பார்க்கி னதுமது
சாரமென்றே வகுப்பா ரறிவீர் 17

b ஆல்கஹோல் என்னும் வெறிதரும் த்ராவகம்
அரும்பிராணவாயு ஜலவாயு
மேல்கரி வாயுவுஞ் சேர்ந்தமைந்தபெரு
விஷநிறை சுரு பானமிதே 18

சுத்த ஜலத்தினு லேசானதிது
சுளீரென்று மூக்கிலு வாயிலுமே
பற்றியே காரமு நாற்றமு நிறைந்த
பாஷாணம் ப்ராணனைப் போக்குமிதே 19

---

a Intoxicant—வெறியுள்ளவை.
b Alcohol—மதுசாரம்—திராவகம்.

அக்கினியாற்கு பீலன்றே யெரிந்தாலும்
அதிற்புகையும்புகைக்கறையும்
எக்காலுங் காணவிராதிதை பரீக்ஷைபா
லேற்றுக் கொள்ளுவீரே னன்பர்களே 20

சமையல் செய்யுமடுப்பாகும் ⁰ ஸ்டோவுக்குத்
தானிதை யுபயோகிப்பதிலும்
அமையுஞ் சுத்தத்திராவகமல்லவிஃ
ததிகக்கலப் பென்றறிவீரே 21

சுத்தத்திராவக மற்பமருந்திடில்
சோகதாக மற்ற தோகதியாய்ச்
சித்தசுவாதீன மிழந்துயிர் நீங்க
க்ஷேமித்திடவே வேண்டுமுண்மையிதே 22

## மதுபானம் நஞ்சினுங் கொடியதெனல்,

குடிவெறியது கொடிய நஞ்செனக்
கூறினேன் சாஸ்திர சம்மதமாய்க்
கொடிய நஞ்சினு மிக்கக் கொடிதெனக்
கூசாமலு ரைப்பேன் கேளுங்களே 23

நஞ்சான துண்டோரை மாத்திரமே கொல்லு
நாற்றவீசு மதுபானவெறி
அஞ்சாதருந்தி னோர்பெற்றோருற்றோரும்பே
ரன்பின் குடும்பந்தலைக் கொல்லுமே. 24

நஞ்சானதாத்தும நன்மையை யொருகால்
நாசஞ் செய்திடலாகும் பொல்லா

⁰ Stove—இருப்புச்சூட்டடுப்பு.

மிஞ்சுங்குடி வெறிஆத்தும சரீர
மேன்மையைப் போக்கிய ழித்திடுமே 25

நஞ்சானதிந்த வுலகச் சுகபோக
நட்பினை மாத்திரம் போக்கிடலாம்
எஞ்சுங்குடி வெறியிக பரநன்மை
யிரண்டையும் நாசமாக்கிடுமே 26

நஞ்சருந்தினோரை யவுழ்தப்ர யோகத்தால்
நல்லசுகம்பெறச் செய்யலாகும்
வஞ்சக்குடி வெறிக்கவுழ்தமே யில்லை
மயக்கந்தெளிந்தெழ வேண்டியதே 27

நஞ்சுட் கொண்டவரை மனிதனென்கலாம்
நாறும்மது பானக்குடியர்களைப்
பஞ்சைகளா விலங்கின வகுப்பிலும்
பங்குபெறச் செய்யக் கூடாதே 28

நஞ்சருந்தினோரை நித்திரை செய்திடும்
நல்லமனிதருக் கொப்பிடலாம்
வஞ்சமது பானக்குடி வெறியரை
மரித்த சவத்துக் கொப்பிடுவாம் 29

சித்தமுமவசம் செயல் விகற்பமாம்
தினமரண நெடியதுன்பம்
அத்தமு நாலமா மவுழ்த மின்மையா
லாலத்தினுங் கொடிதாமதுவே 30

## குடிவெறி குளிரைப் போக்காதெனல்.

மதுபானந் தேகக்குளிரைப் போக்கியே
வன்மையுந் தைரிய வுற்சாகமதும்

இகமாயளிப்ப தென்றே மாந்துபலர்
இச்சையுடன் பானம் பண்ணுகின்றார் 31

குடியின்மயக்க மற்பவுற் சாகமுங்
கோருமுஷ்ண மொருºடிக்ரிவரை
கொடுத்து மயக்கந் தெளிந்தெழுந் தக்கால்.
குளிரும் நடுக்கமிகுந்திடுமே 32

நாக்கு முலர்ந்துமேல் தோலதுங்காய்ந்திட
நல்லறிவு மின்றிவாயுளறப்
பார்க்குங்கண் சிவந்து தேகத்துள்ளுதிரம்
பரவிச்சுப நிலைகுலைந்திடுமே 33

மதுபானமஸ்து சாரமுட்புகவே
வன்மையிரத் தாஸயஞ் சுருக்காய
மிதமிஞ்சியடித் துதிரஓட்டத்தை
விரைவினிற் குன்றச் செய்திடுமே 34

தேகவுள்ளுறுப் புகட் கதிகத்தொழில்
தேக்குவதி னலதி சுருக்கில்
வாகுடன் றேய்ந்தெதிர் பாராத நேரத்தில்
மரணம் வந்திடுஞ் சத்தியமே 35

உஷ்ணம் பெறவிவன் றருந்திய சாராயம்
உட்செல்ல வுள்ளந்தடுமாறி
இஷ்டம் போலழ வோசிரிக்கவோ சண்டை
யெதிர்த்திட மூர்க்கமும் பொங்கிடுமே 36

பிராணனுக்காதரமான அவயவம்
பேதித்ததனிறங்குன்றிடவே

---

º Degree—சொற்பப்பிரமாணம்.

தாராதரமாய்த் தொழின்முறையே செய்ய
சாத்திய மற்றிடக் காணுவீரே 37

சரீமு மாதியந்தமுங் குளிர்ந்து
தளர்வுற்று லாவுஞ் சக்தியற்று
பரீக்ஷையில் சுவாஸம் விடுமியற்கையின்
பலன் குறைந்துயிர் நீங்கிடுமே 38

## மதுபானம் ஜீரணப்படுத்தாதெனல்.

உண்டவாகார நல் ஜீரணமாக்குமென்
றுண்மையாய் நம்பிபறி விழுந்து
அண்டிமே சாராயம் a உஸ்கி பிராந்தியை
யருந்து மன்பரே சற்றுகேளீர் 39

ஜீரணஞ் செய்வித்த நீர்மது ரஸமுந்
தீபன நீருக்குள்ள பலத்தை
வேரறக்குறைத்து உண்டவுணவினை
மிச்சுக்கடினப் படுத்திடுமே 40

இதனுண்மை b பலபொருட் காட்சிசாலைக்
கேகிநீர் சோதித்திடுவீரானால்
விதவிதப்பல ஜந்துக்களுடலை
வெள்ளிடை மலைபோல் காணலாமே 41

காணலாமே அவை பலவாண் டுகளாய்க்
கண்ணாடி புட்டியில் க்ஷேமித்தனு
வேணு முருமாருதழி யாதிலங்கு
விதத்தை யோசித் துணர்வீரே 42

---

a Wisky, Brandy—சீர்மை சாராயங்கள்.
b Meiseum—பலபொருட்காட்சிசாலை.

கவனமாயுற்று நோக்கிடில் புட்டியில்
காண்பது சுத்த திராவகமே
பவவழிக்குனே யாளாக்கிடுமது
பானமுங் கலப்புதி ராவகமே 43

திராவகமாம் மதுபானத் துக்கற்பமும்
ஜீரணஞ்செய் சக்தியில்லை யென்று
புரோக்த மாயிதையின்ன முமாராயப்
புகுந்தால் விரியுமன்பர்களே 44

இச்சையுடன் பலதன்மை பெறவெண்ணிக்
யீன ○பீர் பிராந்தி-ரம் அருந்தி
தக்ஷணமற்ப சுகமளித்தப் புறம்
தயங்கிடச் செய்யு முண்மையிதே 45

குளிரைப்போக்கி யுஷ்ணம்பெற வெண்ணிக்
குடித்து வெறித்து மயக்கங்கொள்
அளவிலாமறு ஷீகப்பதர் பலர்
அங்ஙனமே மாண்டு மடிந்தனரே 46

நரம்பை யிளக்கி வலுவைக் குறைத்து
நரைதிரை மூப்பு சாக்காடு
சுருக்கிலழைத் ததோகதியாக்கிடுஞ்
சுருபான முண்மை யீதறிவீர் 47

குடல் இரப்பையைத் தாக்கி யீரல்ரத்தக்
குழாய் நரப்புகளை யிளக்கி
திடமருண் மூளைஸ்தானத்துக் கேறியே
திண்டாடச் செய்யுங் குடிவெறியே 48

---

○ Beer, Brandy, Rum—சீர்மை சாராயங்கள்

பத்தொன்பா னூற்றாண்டி னாரம்பத்திலிந்தப்
பாருயர் மேனாட்டி லேநடந்த
யுத்தத்தில் மாண்டும டிந்தொழிந்தவர்க
ளுக்குக்கணக்கு வழக்கில்லையே 49

இந்தவித முயிரி ழந்தவீரர்கள்
ஏராளமாகக் குடித்ததினால்
என்றே தேசசரித்திரத்தில் விவரம்
எழுதியி ருப்பதத் தாக்ஷியாமே 50

கொண்ட கஷ்டந்தீர நோய்குளிர் நீங்கிட
கோரும் ஜீரணஉற் சாகம்பெற
மண்டிமதுவுண்டு மயக்கந் தெளிந்தெழ
வருத்து நோயை வகுப்பீரே 51

குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசிக் கொண்டாப்போலு
கொம்பேறி வீழ்ந்தானைக் கடாவேறி (ங்
அலைந்தாப்போலதி துன்பந்தருவதை
யநுபோகத்தா லறிந்திருப்பீர் 25

அறிந்துந் தெரிந்து மறிவில்லாமலே
அவமா னம்பல கஷ்டநஷ்டம்
வருந்தியே யழைத்தல்லல் படுநேய
மாண்பினரே பரியோசிப்பீரே 53

## அளவாகத்தானே குடிக்கிறோம் என்பார்க்கு.

அளவுக்கு மிஞ்சினாலமுதமுநஞ்சென்
றறிந்தே நாங்க ளளவாய்மது
களிக்கவருந்துகின் றோமெனுங்குடிக்
காரரேசற்று செவிசாய்ப்பீர் 54

சாய்ந்தே குடிக்குமளவது அரையோ
முக்காலோ வொன்றோ ஒன்றரையோ
தோய்ந்த புட்டியோ a காலனோ பீப்பாயோ
சொல்லு வீருண்மை யாயன்பர்களே 55

அளவளவெவ யாரு மறியாது
அந்தரங்க மாகக் குடித்தவரே
அளவிலாப் பெருங்கு டியராயிப்போ
தலைந்தழல் கின்றா ரன்பர்களே 56

அறிவீராரம்பத்தி லளவாகவே
அன்பிலுயர் மனையாட்டியுமே
தெரியாமலந்தரங் கத்தில் குடித்த
தீனறின்று பெருங்குடி யரல்லோ 57

யாருந்தன்னைபறி யாதிருக்கமுக்கா
டணிந்து கடைக்குள் ளேபுகுந்து
வாருந் துரிதமாய்க் b கிளாஸில் என்றேவாங்கி
மாந்திய பின்மூளி முக்காடெங்கே? 58

## மதுபானி தனக்கு யாரு நிகரில்லையெனல்.

முக்காடெங்கேயவ ரடக்க வொடுக்க
முறைதுறையபி மானமெங்கே
குக்கலைப் போலக்கு லைத்து துஷ்டப்புலி
கோளரிக்குநிக ரில்லையென்பான் 59

பூனையைப் போலதி சாந்தகு ணத்தவன்
புலியுந்த னக்கெதி ரில்லையென
யானைப லத்துடன் றுள்ளி மந்தியென
வாடிப் பன்றியாய்ப்பு ரண்டிடுவான் 60

---

a காலன்—Gallon, b கிளாஸ்—Glass.

புரண்டு காக்கையுங் கிளியுந் தவளை
போலவே வாயினில் வந்ததெல்லாம்
சரண்ட மிட்டதி தூஷணை வார்த்தையால்
கவிழ்ந்து வைதுசண் டைக்கிழுப்பான் 61

இழுத்துப் பரித்துஅள் ளாடித்தள்ளாடி
யிஷ்டமித்ர ஜன ரைப்பகைத்துப்
பழிக்க வெவருஞ்ச மாதானங்கூறிடப்
பாய்ந்தெனக் கார்நிக ரென்றெதிர்ப்பான் 62

சிற்றின்ப வாசைமேற் கொண்டிட வேசிலர்
தியங்க வுமன மயங்கவும்
உற்றுக் கோபவுக்ரத் தோடுபிதற்றவு
முளரவுஞ் செய்யத் தூண்டிடுமே 63

என்றஹங் காரத்தா லின்னும் பின்னும்பல
ஈனதுர் சேஷ்டைகள் செய்திடவே
மன்னும டியுதை பூஜைசளான்மனம்
மாறி வெட்கத்தால் நகைத்திடுவான் 64

நகைக்க மண்டையு டைந்துதி ரஞ்சிந்த
நல்ல தேகமெல்லாங் காயங்களால்
சகிக்கொ ணாதகு டியுமிறங்கிடச்
சாந்தமுடனிருந் தேங்கிடுவான் 65

ஏங்கியே பித்தனைப் போலிவன் செய்கையு
மெல்லோருங்கூடி பரிகசிக்கத்
தூங்கிவிழுந்தன்னந் தண்ணிரில்லாமலே
சோர்ந்துபி ணம்போ லுறங்கிடுவான் 66

## மதுபானியைக் கண்டு

## தன் மனைவியும் மக்களு மஞ்சுதல்.

வெளியி னூர்ப்பாட்ட மிவ்வா றுனல்சொந்த
வீட்டின் மனைவி மக்கள்பாடு
துளக்க மிட்டுச்சொல் லுவதென் றுலிந்தச்
சுவடிகொள் வாதிது சத்தியமே. 67

சத்திய மறையி னுச்சித நூற்படி
ஜகமறியவே மெய்விவாஹத்
துற்றமனைவியு மிவன்துர்ச் செய்கையால்
ஓலமிட் டலறிப் புலம்புகின்றாள் 68

புலம்பி யாடையு முணவுமின்றியெப்
போதும் பட்டினி கிடத்தலல்லால்
அலகையிவனென வஞ்சிட வாக்கினை
யநுபவித்திடப் போகாதே 69

காதலனுமிவன் குடிமயக்கத்தால்
கண்ணு முகமென்றும் பாராமல்
வாதனை யாய்ப்பொல்லா வசைமொழிகூறி
மாட்டை யடிப்பதுபோலடிப்பான் 70

அடித்தக் ரமமாயவ மானஞ்செய்து
அங்கவள் மூலைமுடுக்குகளில்
அடுப்பங் கரையில் ஒளித்த காசினை
யாத்திர மாயெடுத் தோடிடுவான் 71

வன்மை யுடன்றேடிக் காசுகிட்டாவிடின்
வஸ்திரமோ பெட்டி பேழைகளோ

செம்பு பித்தளை பாத்திர மேதேனும்
திருடி எடுத்தடு மானம்வைப்பான் 72

மானுபி மான மில்லாது மனைவியை
வாதைசெய் தவளைப் புண்படுத்தி
வேணுமென்றே சட்டி பானை பெட்டிகளை
வீதி தனில்போட் டுடைத்திடுவான் 73

உடைத்த டித்துதைத் தாங்காரம்பேசி
யுறங்கி மயக்க முந்தெளிந்து
விடிய எழுந்துவி வரமறிந்து
விழுந்து காலில் பொறுத்தல் கேட்பான் 74

புத்தியில் லாமலே "குடிக்காரன்பேச்சு
பொழுதுவி டிந்தாற் போச்சு"தென்று
அற்ப நாணமின்றி பல்லையுங் காட்டியே
அறிவெ னக்கினி வந்ததென்பான் 75

என்று மனைவி தலைவிதி பிஃதானல்
இச்சையாய்த் தான்பெற்ற செல்வமக்கள்
துன்ப துயரங்க ளெவ்வள வென்றுயான்
சொல்லுவேன் மிக்க பரிதாபம் 76

தாபமாய்க் கஞ்சிக்குக் காற்றுய் பறந்தினி
தயங்கித் தெருத்தெரு வாயலைந்து
சோபமுற்றுத் துணிமணியுமில்லாது
துயர்படுவதை யென்ன சொல்வேன் 77

சொல்லருங் குடும்ப பிள்ளைகள் பள்ளிக்கும்
சுத்த பத்தமாகக் கோவிலுக்கும்
செல்வதைக் கண்டிந்த குடியன் பிள்ளைகள்
தேம்பியழுங்குறற் சோகமந்தோ 78

அந்தோ யிவன்பெற்ற பிள்ளைகளானாலும்
அப்பனின் பேய்முகங் கண்டவுடன்
சந்து பொந்துகளில் பயந்தொளிந்தின்று
தப்பினோமென்று நடுங்கிடுமே 79

## குடியர் பெருந்தரித்திரர் எனல்.

இலக்ஷாதி பதியே யானாலுங் குடியர்
ஈனப்பழக்கத்துக் குள்ளானால்
பிக்ஷாதி பதியா யுகைத்தாரேகிப்
பேசிட வோடுங்கை கொள்ளுவரே 80

பொருள் தனைப் போற்றிவாழ் என்றுஔவையும்
புத்தியாய்க் கூறிய மூதுரையைச்
சிறிதும் லக்ஷியஞ் செய்யாத நியாயச்
செலவு செய் தாந்தையைப் போல்விழிப்பார் 81

அநியாய மாகச் செலவழிக்கபின்னர்
அங்குமிங்குங் கடனுடன் பட்டு
கனங்குலைந்து முன் சம்பாதிக்கவணி
கலனை விற்றிட வுந்துணிவார் 82

இப்படி யேவீட்டின் தட்டுமுட்டுசளு
மின்னும் பொன்வெள்ளி நகைநட்டுகள்
செப்பு பாத்திரங்க ளாடையணிகளைச்
சீரா யடுமானம் வைத்திடுவார் 83

வைத்தே அவமானப் பட்டிவர்பொய்சூது
வஞ்சனை கொலைகளவுக்கே
சற்றேறு மஞ்சாத் துணிகரயாகச்
சாலவு மகரங்க கள்புரிவார் 84

எல்லாவிதத் தோஷ ரோஹங்களுற்பத்தி
ஸ்தானமா யாவரா லும்மிகழச்
சொல்லரு மாடைக்கு மன்னபானுதிக்குஞ்
சோர்ந்தலைவாரிது வுண்மையதே 85

அருளில்லாருக் கவ்வுலகமில்லையென்
ருன்ருேர் கூறிய நன்மொழியாம்
பொருளில்லாருக் கிவ்வுலகமுமில்லை
போதலை யாமிது ரஹசியமோ 86

கொடிது கொடிது தரித்திரமிகக்
கொடிதென் றௌவை பிராட்டியாரும்
திடமாய்க் கூறியதை யநுபோகத்தினில்
தினமறியுமநு போகமன்ருே? 87

தரித்திரமே மற்றனைத்தும் பாதகத்
தந்திர தீயக் கொடுமைகளும்
புரியத் தூண்டும் பெருந்துன்பமிகற்குப்
பொல்லாக் குடிவெறி காரணமே 88

## மதுவிலக்கின் பயனிதுவெனல்

மதுவிலக்குக்கும்மி யன்பாகவே தினம்
வாசித்தறிந்தமெய் யன்பர்களே
பொதுஜன நன்மையைக் கருதுநூலிதைப்
பொருமை கொள்ளாது போற்றுவீரே 89

போற்றுவீ ரிக்கும்மி முற்றிலும்பாடியே
பொய்யுமெய்யு நன்மை தீமைகளுஞ்
சாற்றுநும் புத்தியின் றராசியினிற்றூக்கி
சாவகாசயாகவே பா சிப்பீரே 90

யோசித்து நம்மனே சாக்ஷியைத் தட்டியே
உண்மை யறிந்தும துவிலக்கைப்
பூசித்து நடந்தா லெல்லாச்சுகநலம்
பூரண மாய்ப்பெறுவீ ரன்பர்களே 91

அன்பின் மனைமக்க ளூற்றார் பெற்றாரெல்லா
மங்யோங்ய நித்யச மாதானமா
யின்ப சுகபாக்யச் செல்வம் பெருகிநல்
லிஷ்டமுடன் வாழ்வீர் சத்தியமே 92

சத்திய கற்பனை நூற்படி யொழுகித்
தற்பரனையநுஷ் டானமுடன்
பத்தியாய்த் தொழுது பணிவீர் குடும்பம்
பாங்குட னோங்கித் தழைத்திடுமே 93

தழைத்திட அன்னம்மாள் மதுவிலக்கு
சபையினிற்சேர்ந்தோரங்கமதாய்
நிலைத்து பிரமா ணிக்கந்தவறாது
நீடியுத்தம ராய்ப்பிழைப்பீர் 94

பிழைத்தேனையோர்க்கு மாதிரிகையாயதி
பிரியத் தோடவர்க் கிச்சபையின்
வளமை யும்பெரு நன்மை நயங்களை
வகுத்துக் கூறுவீ ரன்பர்களே 95

## தலைச்சபை ஸ்தாபகம்.

வந்தனைக் குரிய நான்கதி மேற்றிராணி
மாருடன் ஒன்பது மேற்றிராணிமார்
மூந்து மிரண்டு அப்போஸ் தோலிக்குவிக்
காரியர் களுங்குருமார்களும் 96

ஆசீர்வதிக் தவர்கள் பரிபாலன
வாட்சிக்குள் ஸ்தாபிக்கப் பட்டவிந்தப்
பூசித மதுவி லக்குச்சபை யெங்கும்
புகழ்ந்துகொண் டாடச்சி றக்கின்றதே. 97

## கிளைச்சபைஸ்தாபகம்.

கூறுவீ ரிந்தம துவிலக் குச்சபை
குறித்தபெங் களூர்சென்ற் ஜான்ஸ்ஹில்லில்
கோரும் அர்ச்சய சிஷ்டசவேரியார்
கோவிலில் ஸ்தாபிக்கப் பட்டதுவே 98

ஆயிரத்துத் தொளா யிரத்தெட்டா மாண்டி
லாரம் பித்தவிந்த நல்லசபை
நேயமா கப்பல கிளைச்சபையுடன்
நீடித் தொழுங்காய்ச் செழிக்கின்றதே 99

பேட்டை க்ஷேத்ரந் திருக்கோயிற்கொளுந்தூயப்
பிதா பிதாவாருஞ் சூசையப்பர்
மாட்சி சமுகத்தோர் கிளைச்சபை மிக்க
மதிப்புறச் சீராய்ந டக்கின்றதே 100

அதிபுக ழணிபிளாக்கிப்பள்ளியெழு
மர்ச்சய சிஷ்ட காணிக்கைமாதா
துதிமி குங்கோவிலிலோர் கிளைச்சபை
தோன்றியொ ழுங்காய்த்தழைக்கின்றதே 101

சுபகர சப்ரமாநகர் அர்ச்சிஷ்ட
செல்வ நாயகியம் மாள்பஜனை
சபையு மேனையோர் சேரவாங்குங்கிளை
சபைஸ் தாபிக்கச்சி றக்கின்றதே 102

o பெட்பார் ஹெப்பால் இண்ட்யன் இன்ஸ்ட்யூட் ஆப்
பேருப ரிடத்தோர் கிளைச்சபை [சயன்ஸ்
நட்புறத் தோன்றி யதிப்ரபலமாக
நாடோறு மோங்கிச்செ ழிக்கின்றதே 103

அர்ச்சய சிஷ்டசந்தி யாகப்பர் பாளையம்
அங்குயர் பஜனை சபையோரும்
மெச்சுஞ்சூளை ஆரோக்ய மாதாபஜனை
மேன்மை சபைவிர்த்தி யாகின்றதே 104

பொற்புய ரும்புது சீமோன் சேரியின்கண்
புகழ்த ருஞ்சத்துரு சங்கார
அர்ச்சய சிஷ்டஅந் தோனியார் பஜனை
அங்கோர் கிளைச்சபை யுந்தோன்றி 105

அளித்தப்ர மாணிக்கந் தன்னில் நிலைத்து
அங்கங்க ளொழுங்காய் நடந்து மனங்
களிக்க ப்ரோமோட்டர்க ளரும்முயற்சியின்
கரிசனை யையானென்ன சொல்வேன் 106

## மதுவிலக்குச்சபையாலுண்டான
## நன்மைகள்.

கற்றோர் புகழிந்தச் சபைதோன்றிச்சொற்பக்
காலத்தில் பற்பல குடும்பங்களும்
பெற்ற பன்னன்மையவர் வாய் மொழியாலே
பேசும் பெருமைக்களவுமுண்டோ 107

குடும்பத் தலைவன் சபை யங்கமாய்ப்பொல்லாக்
குடியை முற்றுமொ ழித்ததனு

---

o Indian Institute of Science, Hebball

லடைந்த ஆத்தும சரீர நன்மைகட்
களவில்லை யெனவே யார்ப்பரித்தார் 108

பற்பல குடும்பப் பெண்டிர்கள் குருவின்
பாதவீழ்ந் தானந்த பரவசமாய்ப்
பெற்ற வரும்பெரும் பல நன்மைகளைப்
பெருமையாய்ப் பேசியே போற்றுகின்றார் 109

ஏழை குடும்பங்கள் சமாதானத்தி
லின்புற் றெந்நாளுஞ்சு கம்பெறவே
ஆழ்ந்த கருத்தாய் மதுவிலக்குச் சபை
யமைத்த குருநீர் வாழி யென்றார் 110

வாழி வாழியென் றனந்தகுடும்பத்தோர்
மனமாற வாழ்த்தும் பேரொலியைச்
சூழநின்றவர் கேட்டு சபையங்கச்
சொந்த மாகவந்து சேருகின்றார் 111

## சபையினொழுங்குகள்.

மதுவிலக்குச்சபை யினொழுங்குகள்
வாலர்களும் முதி யோர்களுமே
இதமன தாயறிந்தநுசரித்திட
எளிது எளிது மிக வெளிதே! 112

ஆத்துமப் பண்டித ராகுங்குருமார்கள்
அல்லது வைத்திய ருத்தரவின்றிக்
கூற்றனைய் வருந்தி புத்தியை மயக்குங்
குடியை முற்றிலுந் தள்ளிவைப்பேன் 113

என்று திருச்சிலு வைசுரூ பத்தின்றா
யிணைபொற் பாதக மலர்தொட்டு

மன்றல வையின்கண் சத்யப்ரமாணிக்கம்
மன துறுதியாய்ச் செய்யவேண்டும் 114

மனமாறச் செய்தப்ர மாணிக்கந்தனில்
மாறாது நிலைத்து மாதத்துக்கோர்
தினத்தில் நடக்கும் சபைகூட் டத்திற்குச்
சேரவேண் டியதவசியமே 115

அவசியம் வந்தாங்கு நடக்கும் விஷய
மறிந்து மும்மதிக் கோர்முறையே
தவறாது சற்பிரசாத முட்கொண்டு
சபைவி ருத்தியைக் கோரவேண்டும் 116

இன்னும் பிறருக்குள் குடிப்பழக்கத்தை
யின்றமுயற்சிக ளாற்குறைக்க
நன்மன துடனே வேண்டும் பிரயாசை
நாடியுழைத்த லவசியமே 117

மற்றும் பலவிதச் சபையினைப்போல
மாதாந்த விகிதமில்லை யிதற்
குற்றப்பரி பாலிகையாகு மன்னம்மாள்
உயர்ந்த திருநாளைக்கொண்டாடவே 118

வருடத்துக்கோர்முறையிஷ்டானுசாரம்
வன்மைக்கி யன்றபொ ருளுதவி
தருகவேண்டுமென் றுலதுவுங்கட்
டாயமல்லவென தன்பர்களே 119

அன்பா யென்னருங் குடிக்காரச் சோதரர்
அக்கரையாயித னைப்படிப்போர்
நன்குணர்ந் துற்றகுடும் பவினருடன்
நாளுஞ் சுகம்பெற்று வாழியவே 120

வாழிமைசூர் மேற்றிராஸன வாண்டவர்
வாழிசபையக்கி ராஸனராம்
வாழி J. B சங்வாங்தோன் குருஸ்வாமியும்
வாழிவாழி நிதம்வாழியவே 121

வாழி சங்கைகுரு ருக்கிரோ முனியும்
வல்லப்ரசங்கி டிசில்வாகுரு
வாழிபிரியாண்ட் குருஸ்வாமியும் J. D.
டிசோஸா குருவும் வாழிவாழி 122

வாழி V. ஜாக்குமேன் மாமுனியும்வல்ல
மாதவ V. M. ஆல்பர்ட்கு ருவும்
வாழி தூயகன்னி சந்நியாஸிகளும்
வாழி சுகநலம் பெற்றுவாழி 123

வாழிசபை காரியாதி பதிகளும்
வாழி புரோமோட்டர்கள் அங்கங்களும்
வாழி C. S. ஞானப்ரகாசன் கும்மியும்
வாழி பல்லாண்டு வாழியவே. 124

சமாப்தம்.

சர்வேஸ்வராய நம:

# நொண்டிச் சிந்து.

## காப்பு-வெண்பா.

மானஞ் சுகஞ்செல்வ வன்மையெலாம் போக்குமது
பானப் பழக்கத்தாற் பங்கமுற்றுத்—தானழிந்த
சின்னப்ப னின்கதையைச் சிந்தாகப் பாடுதற்கு
என்னப்பன் றாளிறைஞ்சி னேனன்.

## நொண்டிச் சிந்து.

குடிவெறி கொடியபாஷாணம்—சீ! சீ!
குடியரே இதைப்போலுண்டோ அவமானம்

கெட்டு நொந்தவர்க்களவில்லை—புகழ்
கீர்த்தியுஞ் செல்வமுங் கனவிலுமில்லை

சுந்தரமுகமும் விகாரம்—நல்ல
சுகதேக மெங்ஙனும் பிணியினகோரம்

சனியனையிலைக்கு வாங்கிறுற்—போலே
மனமாறப் பணங்கொடுத்தருந்தி யேங்கினர்

கட்டமு நஷ்டமுமெங்கே—பொல்லாத்
துஷ்டகுடிப் பழக்கத்தின் விலங்கே

வறுமையுஞ் சிறுமையுந்தானே—வந்து
நிறைந்தென்று நிலைத்திடுஞ் சத்தியந்தானே

கலஹமுங் கலக்கமுமீங்கா—மெப்போ
திலகிடும்பி டிவாதமாயிது போங்கா

கூச்சலுங் கூக்குரலகோரம்—துஷ்ட
பேச்சுமயிர்பிடி. சண்டை விஸ்தாரம்

பன்னிப்பன்னிச் சொல்லநீளும்—இது
பாரெலாம் வெட்டவெளிச்சமே சாலும்

தெரிந்துந் தெரியாதோர்போலே—மது
வெறிக்கக் குடித்துழல்கின்றார் மண்மேலே

இதற்கு மத்யாட்சியவசியமோ—வேண்டு
மென்னில் பல்லாயிரமுண்டதி சயமோ?

குடிக்கார சின்னப்பனைப்போல்—நீசக்
குடியருக்குங் கணக்குண்டோ விப்பூமேல்

சொல்லுவேனவன் பிரதாபம்—இவன்போல்
நல்லவனில்லை யென்றே பிரஸ்தாபம்

கோவிலே இவனுக்குக்கதி—வேத
குருமாரின் ஞானோபதேசமே மதி

கடன்பூசை யென்றுவந்தவருன்—தின
முடனல்லாயத்த மாய்நன்மை பெறுவான்

ஒருசந்தி யுபவாஸப்பழக்கம்—வேறு
கிறிஸ்துவரிவ னிடங்கற்ப தொழுக்கம்

தெய்வபக்தியில் மிகச்சிறந்தான்—தர்மச்
செய்கையினு ருவாகவே யிவன்பிறந்தான்

வாய்மொழி தேனினுமினிதே—நல்ல
வாய்மையுங் கேண்மையின பூரணமனதே

அயலகத்தார்க் குபகாரம்—என்றுஞ்
செய்வதே இவன்கொண்ட வைராக்ய சாரம்

தேடிவந்தவர்க் குபசாரம்—மன
நாடிப்புரிந் திடுவானே யந்நேரம்

சத்துருவா னாலுமிவனே—ப்ராண
மித்துருவாய்ப் பணிந்தேத்து வார்கவனி

சாந்தமே இவனுக்காபரணம்—வேதவே
தாந்தமுறை நெறியென்றுந் தியானம்

குடும்பத்தில் தேவாசீர்வாதம்—நிறைந்
திடுவதே யவனல்ல யோக்கியபோதம்

பாக்கிய மவனிற்ப்ரஸன்னம்—அதிசி
லாக்கிய யோக்கியப்பேறே நல்லெண்ணம்

இப்படியிருந்தமா யோக்யன்—துஷ்ட
கற்பனை நேஸத்தாலானான யோக்யன்

குடியர் நேஸத்துக்குட்பட்டான்—மது
குடித்திடக் கட்டாயத்துக்குடன் பட்டான்

கொஞ்சங் கொஞ்சமாயுயர்ந்து—மிக
மிஞ்சிகுடித் திடப்பழகினான் மறைந்து

கோவிலும் பூசையும்போச்சு—நேசர்
தாவுஞ் சாராயக்கடையே வீடாச்சு

வேதோப தேசஸங்கசப்பு—குடி
சூதோபதேசமே உல்லாசக் களிப்பு

வெள்ளிக்கி ழமையென்றோரான்—மது
கள்ளுக்கடைக்கரி சாக்கணு மாறான்

பெண்டிர் பிள்ளைகள்மேல் வெறுப்பு—விடாச்
சண்டையே அவன்கொண்ட ஆனந்தவிருப்பு

துணிமணி யாவுமட மானம்—மனைவி
துணிந்துகேட்டாலோ வந்ததவ மானம்

சம்பள மனைத்துங்குடியில்—மனச்
சம்மத மாயழித் துற்றான்மிடியில்

உத்தியோக முமிழந்தான்—வேறு
நத்து மிடமின்றி நாய்போ லலைந்தான்

அன்பில் லவர்ந் திட்டமக்கள்—இவனைக்
கண்டால் பயந்தஞ்சி நடுங்குவர் மனைக்குள்

குடிக்கக் கூழுக்குமே பஞ்சம்—வஸ்த்ரம்
உடுத்தவே யில்லாது நாணத்தா லஞ்சும்

இப்படி யாகச்சிலநாள்—துஷ்ட
னைப்போல் திரிந்தலைந்துழன் றே யொருநாள்

சாராயக் காரனின் வீட்டைத்—தேடி
நேராய்ப் புகுந்தங்கு கண்டானற்பேற்றை

எளியசா ராயக்கடைக்காரன்—பணம்
வலியக் கொடுத்தாலானான் பணக்காரன்

வீடுவாசல் தோட்டந்துரவு—சொந்த
மாடமா ளிகைபல பெற்றான் ப்ரபு

அஷ்டயிஸ் வரியமனைவாஸம்—அவன்
இஷ்டமனை மக்களலங் காரநேசம்

கட்டில்நாற் காலிசோபீரோ—கூடத்
திட்டதில் வெல்வட்டு ஜோடினைசீரோ

சித்திரவே லைப்பாடோடு—வர்ண
மெத்தைகளு வெல்வெட்சோப் பாக்களோடு

ரத்தினஜ முக்காளப்விரித்து—உயர்
பட்டுபீதாப்பர ஜாலர்சித்திரித்து

பலவித லஸ்தர் குளோபு—கிளை
விளக்குகள் விஸ்தாரவ ழகின்சிறப்பு

ஒன்றொன்றுயாச்சர்யத்தோடு—இந்த
சின்னப்பன் பார்த்திட யோசனை யோடு

சாராயக்கா ரனுங்கனிவாய்—இவனை
நேராயுள் ளழைத்துச்சென் றேயினிதாய்

காட்டினன் பலவிதவெள்ளி—சுயப்
பாத்திரங்களையும்மான் ருகவேத்தள்ளி

அலங்கார வேலைப்பாடமைத்து—துலங்கும்
பலவித நகைகளை வெள்ளியாலிழைத்து

பொற்பணி பூஷணமணிகள்—நவ
ரத்தினக் கற்பதித் தொளிதரு மணிகள்

காப்புகொ லுசுடன்றங்க—மின்னும்
டாப்புச் சலங்கையுஞ் சுடராயிலங்க

பொற்பணி ரவைகளைவைரக்—காந்தி
கற்களிழைத் துப்பளிச்செ னுமோதிர

மின்னுவிலை யுயர்முத்து—தொடு
வண்ணஹாரங்கள்சரஞ் சரக்கொத்து

பட்டும திற்பொற் சரிகை—நக்ஷா
மட்டணி யாடைகளி னியுர்பல்வகை

விலையுமதித் திடவெண்ணா—தினிசிவ்
வளவென்று எண்ணிக்கணக் கிடவொண்ணா

தனைத்தையுங் கண்ணுடா யரிய—பெருந்
தனமூமவனிதிரு வியனுமறியக்

கண்டானிப் பேதைசின்னப்பன்—எதனை
லுண்டான நிலைவென்று சாவினைனண்பன்

குடிக்காரன் காசென்றான் மெதுவாய்—மனதி
லிடிவிழுந் ததுபோல எண்ணிபலவிதமாய்

அன்றுமுதல்நல் வைராக்யம்—செய்து
வென்றுகுடி யதைமறுத் தானல்யோக்யம்

விஷமெனப் பகைத்திட்டான் குடியை—எட்டிக்
கசப்பென வெறுத்திட்டான் சாராயக்கடையை

பட்டபாடு களையுணர்ந்தான்—மதுவால்
கெட்டுசீ ரழிந்ததை யுற்றுநினைந் தான்

179628



கொண்டமனைவிமேலாசை—மிகக்
கொண்டுபச்சாத் தாபப்பட்டானிர்க்கோஷி
ஊதாரிப் பிள்ளையைப்போல—உழன்று
தீதாய்த் திரிந்தவன்சென்றான்குருபாலே

குருமலரடிகளில் வீழ்ந்தான்—குற்றங்
குறைகளைச் சொல்லியே மனஸ்தாபத்தாழ்ந்தான்
நல்லஆயத்தமுஞ் செய்தான்—எல்லாம்
வல்லவனைசீ ராலீதெல் லாங்கொய்தான்

யோக்கியனிவனெப்பெற்றான்—உத்தி
யோகத்திலுந் தலைஸ்தானத்தையுற்றான்
வறுமை பிணியெலாம்பறந்து—உடனே
விரைந்தோடிச் சென்றதே அறிவிற்சிறந்து

இன்னவிதஞ் சிலமாதம்—போக
முன்னிருந்த செல்வச்சீ ருற்றானீதம்
கண்டவரெல் லாம்பணிவர்—பழய
சண்டாளநண் பரிகழ்ந்து முனிவர்

செல்வமுஞ் சீருநிறைந்து—அதி
நல்லவனாய்ப் பேரெடுத் தானுயர்ந்து
நன்மையுந் தீமைசீர்தூக்கி—இதின்
உண்மையறிந் தூருடிய தைநீக்கி

அறிஞர்கள் போற்றவுகந்து—பூவில்
அரும்பெரும் பேற்றினை பெற்றுமகிழ்ந்து
பல்லாண்டு க்ஷேமமாய் வாழ—மிக
நல்லநெறி யொன்று சொல்லுவேன்றாழ

நம் அன்னம்மாள் மதுவிலக்கு—சபையில்
நன்மனதோடுமெய்ப ராய்க்கதித்து
பிரமாணிக் கத்தில்நிலைத்து—இக
பரநன்மை பெறுவாய் மென்மேலுஞ்செழித்து

ஞானப்ரகாஸன்பொன் வாக்யம்—தனை நி
தானத்துடனெண்ணி நடந்தாலே பாக்யம்!

தூத்துக்குடி, தமிழ்ப்பண்டிதர்

# ஸ்ரீமாந். M. P. மஸ்கரிஞஸ் அவர்கள்

உதாரித்தது.

தாங்கள் எம்பார்வைக்கு அனுப்பிவைத்த "மதுவிலக்குக் கும்மி" யென்னும் அருஞ்சுவடி பார்வையிட்டு அளவிலா ஆநந்தம் அடையலானோம். சாஸ்திரயுக்திக்கும் அநுபோகமுறைக்கும் பொருத்தமான எண்ணிறந்தவிஷயங்கள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. பண்டிதர் மட்டுமல்ல பாமரரும் தெள்ளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய மேரையாய் இந்நூல் அத்தனை இலகுவானமுறையில் எழுதப்பெற்றிருக்கின்றது. மேலும், சொல் நயமும் பொருள் நயமும் தொடைநயமும் நடைநயமும் இந்நூலில் மிகுதியும் தோன்றக் கிடக்கின்றது.

மதுவிலக்குத் தொழில் ஆத்ம இரக்ஷண்யத் தொழில். இவ்விரக்ஷண்யத் தொழிலுக்கு ஆதாரமான இந்தநூலை இத்தனை அழகாகவும் அலங்காரமாகவும் வரைந்துவைத்துத் தமது நல்ல பெயரை மலைமேல் விளக்கென்ன நாட்டி வைத்த பங்களூர் சென்ற். மேரிஸ் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளையவர்கள் மட்டில் நாமெல்லோரும் விசேஷமாய் நமது கத்தோலிக் சகோதரர் ஒவ்வொருவரும் நன்றிபாராட்டக் கடமை பூண்டிருக்கின்றோம்.

எமது நண்பர் ஸ்ரீமான் ஞானப்பிரகாசம் பிள்ளையவர்களுக்கு யாம் பல்லாண்டு கூறுகின்றோம்.

---